1971 டிசம்பர் 17]

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, மருதமலைக் கோவிலுக்கு கிருத்திகை போன்ற நாட்களில் பக்தர்கள் அதிகமாகப் போகிறார்கள், இரண்டு மூன்று நாட்கள் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஆனால் அங்கே தங்க முடியாமல் கோவைக்கு வரவேண்டி இருக்கிறது. கிட்டத்தட்ட 12 மைல்கள் வரவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இந்த நிலையில் பக்தர்களுக்கு வசதி செய்து கொடுக்க அங்கே விடுதிகள் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, தற்போது கோவிலைச் சுற்றி 13 சத்திரங்கள் இருக்கின்றன. அவற்றில் 6,000 பேர்கள் தங்கலாம். சுமார் ரூ. 60,000 அளவில் திருமண மண்டபம் கட்ட வேலை நடந்து கொண்டிருக்கிறது. இரண்டு மூன்று மாதங்களில் அது முடிவடையும். மேற்கொண்டு நிலமில்லாததால், பக்கத்தில் உள்ள புறம்போக்கு நிலங்களை ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, இந்த மருதமலைக்கோவிலை விரிவாகக் கட்டி நல்ல முறையில் இருக்கும்படி சினிமா புரொட்யூசர் திரு. சின்னப்பா தேவர் அவர்கள் செய்தார்கள் என்று கேள்விப்பட்டேன். அவரிடத்திலே இந்த வேண்டுகோளைவிட்டால், தெய்வ பக்தியின் பெயரால் செய்வார். அதை இந்த அரசாங்கம் செய்யுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, செய்யலாம்.

### *Air cooling plant in Tiruchendur temple*

* 542 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether air cooling plant has been fixed at Moolasthanam of the Tiruchendur temple, in Tirunelveli district; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) இல்லை.

(இ) குளிர்சாதன அமைப்பு திருச்செந்தூர் கோவிலில் ரூ. 37,700 மதிப்பீட்டில் சுமார் 300 லிருந்து 500 பேர் வரையிலும் நின்று வழிபாடு செய்யக்கூடிய மகாமண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

### அர்ச்சகர்களுக்கு சம்பள நிர்ணயம்

* 543 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அறநிலையத்துறைக்கு உட்பட்ட கோயில்களில் அர்ச்சகர் பணிபுரிபவர்களுக்கு சம்பளம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, மதுரை ராமேஸ்வரம் போன்ற கோவில்களில் இருக்கின்ற அர்ச்சகர்களுக்கு சென்ற காலத்தில் கொடுக்கப்பட்ட ஊதியங்களே இப்போதும் கொடுக்கப்பட்டு வருகிறது. அந்த ஊதியத்தை அதிகமாக்கவேண்டும் என்று கோரிக்கைகள் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS